සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**45 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

| | | | |
|---|---|---|---|
| භරත නැටුම් | I, II | පැය තුනයි | |
| பரதநாட்டியம் | I, II | மூன்று மணித்தியாலம் | |
| Bharatha Dancing | I, II | Three hours | |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பரதநாட்டிம் I

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- ✳ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
- ✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** நாட்டிய வேதம் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம் (3) கந்தர்வ வேதம் (4) அதர்வண வேதம்

**2.** முருகனை வேண்டி ஆடப்படும் கிராமிய நடனம்
(1) கும்மி (2) காவடி (3) கரகம் (4) கோலாட்டம்

**3.** ஸம்யுத ஹஸ்தத்தின் 14 ஆவது ஹஸ்தம்
(1) சம்புடம் (2) சக்கரம் (3) பாசம் (4) கீலகம்

**4.** பிராமண ஹஸ்தத்தை எடுத்துக்கொள்ளும் நவக்கிரஹ ஹஸ்தம்
(1) அங்காரக (2) சுக்கிர (3) புதக (4) பிரஹஸ்பதி

**5.** இராமன் சீதையை நோக்கியபோது சீதையிடம் காணப்பட்ட சிரோ, திருஷ்டி பேதங்கள் முறையே
(1) உல்லோகிதம், துதம் (2) அதோமுகம், அவலோகிதம்
(3) அவலோகிதம், அதோமுகம் (4) துதம், உல்லோகிதம்

**6.** 'வசோ' என்பதன் கருத்து யாது?
(1) துல்லியமான உச்சரிப்பு (2) வேகம்
(3) ஆர்வம் (4) உறுதி

**7.** அண்ணன், தம்பி என்பவர்களை அபிநயிக்கப் பிரயோகிக்கும் ஹஸ்தம்
(1) அராளம், அராளம் (2) திரிபதாகம், அராளம்
(3) மயூரம், அராளம் (4) மயூரம், மயூரம்

**8.** தெய் திதி தெய் - இதன் மிருதங்கச் சொற்கட்டு
(1) தக ததிங்கிணதொம் (2) தகதிகு ததிங்கிணதொம்
(3) ததிங்கிண தொம் (4) கிணதொம்

**9.** மொத்த அட்சர எண்ணிக்கையாக 12 இனை எடுத்துக்கொள்ளும் தாளங்கள்
(1) கண்ட ஜாதி மட்டிய தாளம், சதுஸ்ர ஜாதி அடதாளம்
(2) சங்கீர்ண ஜாதி திரிபுடை தாளம், மிஸ்ரஜாதி திரிபுடை தாளம்
(3) சங்கீர்ண ஜாதி ஜம்பை தாளம், மிஸ்ர ஜாதி ரூபக தாளம்
(4) சதுஸ்ர ஜாதி அடதாளம், திஸ்ர ஜாதி அடதாளம்

[பக். 2 ஐப் பார்க்க

**10.** நிர் கற்ற அலாரிப்பின் இராகம், தாளம் முறையே
(1) திஸ்ர ஏகம், நாட்டை (2) நாட்டை, திஸ்ர ஏகம்
(3) சாவேரி, ரூபகம் (4) ஆரபி, ஆதி

**11.** அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் உலா வருவதைக் குறிக்கும் வண்ணம் எது?
(1) கிரளா வண்ணம் (2) ஈரடி வண்ணம் (3) உரக வண்ணம் (4) உதார வண்ணம்

**12.** தங்கம், தாமிரம், இரும்பு போன்றவற்றைக் காண்பிப்பதற்குப் பயன்படுத்தப்படும் அசம்யுதஹஸ்தம்
(1) பிரம்மரம் (2) ஹம்ஸாசியம் (3) சதுரம் (4) கடகாமுகம்

**13.** சிலாபத்தில் பயில் நிலையில் உள்ள கூத்து
(1) வடமோடி (2) வேத்தியல் (3) நாட்டுக் கூத்து (4) தென்மோடி

**14.** 'வான் கைலாயம்' எனக் குறிப்பிடப்படுவது
(1) இமயமலை (2) திருவண்ணாமலை (3) வசந்தமலை (4) பொன்மலை

**15.** 'அனங்கன்' எனப்படுபவர்
(1) இந்திரன் (2) மன்மதன் (3) குபேரன் (4) நிருத்தி

**16.** 'வீணாவித்தியாதர' என்னும் விருதுப் பெயர் பெற்ற மன்னன்
(1) இராஜசிம்மன் (2) இராஜராஜசோழன்
(3) மகேந்திரவர்மன் (4) சிம்மவிஷ்ணு

**17.** பின்வருவனவற்றுள் தொழில்சார் நடனப் பாடலாக அமைவது
(1) "காவடி எடுத்து வந்தோம்..." (2) "மங்கையர் எல்லோரும்..."
(3) "கொழுந்து கொய்வோமே..." (4) "கோலாடுவோம்..."

**18.** சங்கு, சக்கரம் என்பவற்றின் தோற்றம்
(1) அழகு (2) அம்சம் (3) படைப்பு (4) உபதேசம்

**19.** 'தண்ணுமை' வாத்தியம் எனப்படுவது
(1) மிருதங்கம் (2) வீணை (3) வயலின் (4) தவில்

**20.** பரதநாட்டிய உருப்படிகளுள் இதயம் எனக் குறிப்பிடப்படும் உருப்படி
(1) பதம் (2) அலாரிப்பு (3) வர்ணம் (4) தில்லானா

**21.** ஹம்சன் யானை உரு எடுத்து வந்த போது கிருஷ்ணன் அவனுடைய கொம்பினை ஒடித்து ஆடிய கூத்து
(1) மற்கூத்து (2) கொடுகொட்டி (3) துடிக்கூத்து (4) அல்லியம்

**22.** ;;; தத், தாம் தித், தெய், தாம் - இதன் மொத்த மாத்திரைகள்
(1) 9 (2) 12 (3) 14 (4) 16

**23.** லலித அங்க அசைவுகள் அற்றவள்
(1) லோக தர்மி (2) நாடக தர்மி (3) நாட்டிய தர்மி (4) சாஸ்திரிய தர்மி

**24.** வெள்ளுடுப்பு நிலையில் ஒரு முழு இரவும் ஒத்திகை பார்த்தல்
(1) தினக்கூத்து (2) ஊருக்குச் செல்லல்
(3) அடுக்குப்பார்த்தல் (4) கிழமைக்கூத்து

**25.** மன்னரும் கற்றறிந்த சான்றோர்களும் உள்ள அவையில் ஆடும் கூத்து
(1) நாடகம் (2) தென்மோடி
(3) பொதுவியல் (4) வேத்தியல்

**26.** 'கவண் பாடுதல்' அல்லது 'பிரிபடுதல்' என்ற எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற உருப்படி
(1) தோடயமங்களம் (2) கௌத்துவம் (3) பதம் (4) ஜாவளி

**27.** நட்டுவாங்கத் தாளத்தில் வலது தாள ஓசையைக் குறிக்கும் அதிதேவதை
(1) சிவம் (2) விஷ்ணு (3) சக்தி (4) பிரம்மா

[பக். 3 ஐப் பார்க்க

**28.** பின்வருவனவற்றுள் வடமோடிக் கூத்தின் சுவை **அல்லாதது**
(1) வீரம் (2) கோபம் (3) அழுகை (4) வியப்பு

**29.** தாண்டவத்தினை ஆண்கள் அழுத்தத்தோடு ஆடுவதைக் குறிப்பது
(1) உத்தத பிரயோகம் (2) சுகுமார பிரயோகம்
(3) சுத்த பூர்வரங்கம் (4) சித்திர பூர்வரங்கம்

**30.** **X** நிரலுக்குப் பொருத்தமானவற்றை **Y** நிரலிலிருந்து தெரிந்தெடுத்து ஒழுங்குபடுத்துக.

| | X | | Y |
|---|---|---|---|
| I. | முனி தாண்டவம் | A | இரத்தினசபை |
| II. | ஊர்த்துவ தாண்டவம் | B | தாமிரசபை |
| III. | சந்தியா தாண்டவம் | C | ராஜிதசபை |

(1) A, B, C (2) B, A, C (3) C, A, B (4) C, B, A

● பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு **31, 32** ஆகிய வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.

A - குழல் இசைப்போன், யாழ் ஆசிரியன் போன்றோர் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.
B - சித்தன்னவாசல் ஓவியம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.
C - நடனம் ஆடுவதற்கென்றே ஆடம்பலம் என்னும் அரங்கங்கள் காணப்பட்டன.
D - மக்கள் கூட்டாக வாழ்ந்தமையால் குழு நடனங்கள் இடம்பெற்றிருந்தன.
E - சொர்க்கம், பாண்டரங்கம் ஆகிய நடனங்கள் ஆடப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

**31.** இவற்றுள் சங்கமருவிய காலத்திற்குப் பொருத்தமானவை
(1) A, C ஆகியன மாத்திரம் (2) C, D ஆகியன மாத்திரம்
(3) D, E ஆகியன மாத்திரம் (4) E, B ஆகியன மாத்திரம்

**32.** இவற்றுள் பல்லவர் காலத்திற்குப் பொருத்தமானவை
(1) A, C ஆகியன மாத்திரம் (2) A,D ஆகியன மாத்திரம்
(3) A, E ஆகியன மாத்திரம் (4) B, E ஆகியன மாத்திரம்

● கீழே தரப்பட்ட அட்டவணையைக் கருத்திற்கொண்டு **33** தொடக்கம் **35** வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| | ரஸம் | கடவுள் | எதிர் ரஸம் | நிறம் |
|---|---|---|---|---|
| (i) | சிருங்காரம் | A | பீபட்ஸம் | B |
| (ii) | C | யமன் | D | சாம்பல் |
| (iii) | ரௌத்திரம் | E | அற்புதம் | F |


**33.** A, B குறியீடுகளுக்குப் பொருத்தமானவை
(1) விஷ்ணு, வெள்ளை (2) மகாராஜன், வெள்ளை
(3) மகாராஜன், பச்சை (4) விஷ்ணு, பச்சை

**34.** C, D குறியீடுகளுக்குப் பொருத்தமானவை
(1) பயானகம், வீரம் (2) கருணா, ரௌத்திரம்
(3) கருணா, ஹாஸ்யம் (4) பயானகம், ஆச்சர்யம்

**35.** E, F குறியீடுகளுக்குப் பொருத்தமானவை
(1) உருத்திரன், சிவப்பு (2) பிரம்மா, கறுப்பு
(3) உருத்திரன், நீலம் (4) பிரம்மா, மஞ்சள்


● **36** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள படத்தினை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.

**36.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள காற்று வாத்தியம்



(1) ஹார்மோனியம்
(2) சுருதிப்பெட்டி
(3) மலோடிக்கா
(4) மகுடி

**37.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஹஸ்தம் யாது?



(1) சந்திரகலா
(2) மிருகசீர்ஷம்
(3) சிம்மமுகம்
(4) பிரளம்பம்

**38.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள இந்திய சாஸ்திரிய நடனம் யாது?



(1) மோகினி ஆட்டம்
(2) மணிப்புரி
(3) கதக்
(4) ஒடிசி

**39.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ரஸம் யாது?



(1) ரௌத்திரம்
(2) பீபட்சம்
(3) அற்புதம்
(4) வீரம்

**40.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள வாக்கியக்காரர்



(1) பொன்னையாபிள்ளை
(2) வழுவூர் இராமையாபிள்ளை
(3) மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(4) சின்னையா

* *

[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Web: www.pastpapers.wiki

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**45 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024 (2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024 (2025)

භරත නැටුම් I, II
பரதநாட்டியம் I, II
Bharatha Dancing I, II

## பரதநாட்டியம் II

✳ **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

✳ ஒவ்வொரு வினாவிற்கும் **12** புள்ளிகள் உரித்தாகும்.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) மலர்களை கையில் வைத்து ஆடும் நடனம் எது?

(ii) கண்டிய நடனத்தின் பாத நிலை எவ்வாறு அழைக்கப்படும்?

(iii) மயானத்தில் இருண்ட நள்ளிரவில் பூத கணங்களோடு இறைவன் ஆடிய தாண்டவம் யாது?

(iv) 'வங்கியம்' என அழைக்கப்படும் இசைக்கருவி யாது?

(v) பஞ்சபாணங்களில் மனவருத்தம், சோகத்தினை உண்டாக்கக் கூடிய மலர் எது?

(vi) 'சத்திரியசிகாமணி' என்னும் விருதுப் பெயருக்குரிய மன்னன் யார்?

(vii) மகாபலிச் சக்கரவர்த்தியின் கர்வத்தை அடக்க பகவான் எடுத்த அவதாரம் யாது?

(viii) தாய் சேய் உறவைக் குறிக்கும் பாவம் யாது?

(ix) கண்டிகைகளினால் ஆக்கப்பட்ட உருப்படிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(x) மிருதங்கத்தின் **இரண்டு** வகைகளையும் எழுதுக.

**2.** (i) 1 ஆவது "தித் தெய்ந்த தாதெய்" அடவின் மறுபெயர், தாளம் என்பவற்றை தனித்தனியாக எழுதுக.

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட அடவில் பிரயோகிக்கப்படும் முத்திரைகள், பாதநிலைகள் என்பவற்றைக் குறிப்பிடுக.

(iii) மேலே (i) இல் குறிப்பிட்ட அடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் திரிகாலங்களிலும் எழுதுக.

**3.** (i) 'தஞ்சைப் பெருவுடையான் பேரிசை' என்னும் நூலினை எழுதியவரின் பெயரினைக் குறிப்பிடுக.

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட கலைஞர் இயற்றிய உருப்படிகள் **நான்கினை** எழுதுக.

(iii) அக்கலைஞரின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாக விவரிக்குக.

**4.** பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை ஸ்லோகத்துடனும் அதன் கருத்துடனும் எழுதுக.

(i) அராள ஹஸ்தம்

(ii) உத்ஸங்க ஹஸ்தம்

(iii) கர்த்தரீஸ்வஸ்திக ஹஸ்தம்

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

5. (i) கிராமிய இசைக்கருவிகளில் தோற்கருவிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) 'இராஜ வாத்தியம்' என அழைக்கப்படும் தோற்கருவியினை வரைந்து அதன் பாகங்களைக் குறிப்பிடுக.

(iii) மேலே (ii) இல் குறிப்பிட்ட வாத்தியத்தினை பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விவரிக்குக.

- தோற்றம்
- மறுபெயர்கள்
- பாவனை முறை

6. (i) கதையை அடிப்படையாகக் கொண்ட இந்திய சாஸ்திரிய நடனம் யாது? இந்நடனம் தோற்றம் பெற்ற மாநிலத்தைக் குறிப்பிடுக.

(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட சாஸ்திரிய நடனத்தின் சிறப்பம்சங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) நீர் குறிப்பிட்ட சாஸ்திரிய நடனத்தின் நடிகர்களின் முகவேஷங்களைக் குறிப்பிட்டு உதாரணங்கள் மூலம் விவரிக்குக.

7. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) கீர்த்தனம்

(ii) சொற்கட்டு

(iii) பதம்

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!